FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8318755

1. District : மாவட்டம் **Tiruvannamalai** PS: காவல்நிலையம் **V&AC** Year: ஆண்டு **2026** FIR No.: மு.த.அ. எண் **09/2026** Date: நாள் **02.10.2026**

2. (i) Act சட்டம்: **The Prevention of Corruption Act 1988 as amended by The PC (Amendment) Act 2018.** Sections பிரிவுகள்: **7 (a)**

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் **22.09.2026** Date to : நாள் வரை **Between 15.00 hrs and 22.00 hrs**

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் - Time to : நேரம் வரை -

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **23.09.2026** Time : நேரம் **17.00 hrs**

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **02.10.2026 Vol - III** Time நேரம் **17.00 Hrs**

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் **Computer Typed**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் **110 Kms North East**

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி **O/o the Thiruvathipuram Municipality, Cheyyar, Tiruvannamalai District.**

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையின் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **Tmt.A.Thenmozhi** (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் **D/o.S.Arumugam**

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு **Age-45** (d) Nationality நாட்டினம் **Indian** (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் **Special Tahsildar (Social Security Scheme) Special Deputy. ICO** (g) Address : முகவரி **Taluk Office, Kalasapakkam, Tiruvannamalai District.**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. Tr. S. Andrews, Commissioner, Thiruvathipuram Municipality, Tiruvannamalai District.
2.Tr. R. Anastraj, Office Assistant, Thiruvathipuram Municipality, Tiruvannamalai District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

---

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10 Total value of properties stolen / Involved : ------
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11 Inquest Report / Un-natural death Case No. if any: ------
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required) : ------
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது. திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான். 23.09.2026-ஆம் தேதி மாலை 17.00 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது திருவண்ணாமலை மாவட்டம் கலசபாக்கம் தனிவட்டாட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திருமதி. ஆ. தேன்மொழி அவர்கள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனு கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் திருமதி. ஆ. தேன்மொழி, தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்), கலசபாக்கம் வட்டம், திருவண்ணாமலை மாவட்டம், பொறுப்பு துணை ஆய்வுக்குழு அலுவலர். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவண்ணாமலை. R.C.S2/189/2026, Dated: 23.09.2026 அய்யா, பொருள்:22.09.2026-ஆம் தேதியன்று திருவண்ணாமலை மாவட்டம் செய்யார் திருவத்திபுரம் நகராட்சி அலுவலகத்தில் எனது

இதன் தொடர்ச்சி தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14 Signature / Thumb impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Name: பெயர் .....
Rank: நிலை ..... No. எண் .....

15 Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

முன்னிலையில் திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் மற்றும் காவல் குழுவினர்களுடன் திடீர் சோதனை மேற்கொண்டது - புகார் அளித்தல் - தொடர்பாக. பார்வை: திடீர் ஆய்வின் போது தயாரிக்கப்பட்ட செயல்முறை நடவடிக்கைகள், நாள் 22.09.2026. நான் கடந்த 22.09.2026-ஆம் தேதி பணியில் இருந்த போது திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை எண்.A1/Pdl.708/2026-இன் உத்தரவுப்படி, திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு குழுவினருடன் இணைந்து திடீர் சோதனை மேற்கொள்ள பொறுப்பு துணை ஆய்வுக் குழு அலுவலர் நிலையில் ஒரு அலுவலர் தேவைப்படுவதாகவும், உடனிருந்து அரசு சாட்சியாக செயல்பட வேண்டியுள்ளதாகவும் கூறி என்னை 22.09.2026-ஆம் தேதி திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு நேரில் சென்று அறிக்கை செய்யுமாறு கேட்டுக்கொண்டதன் பேரில், நான் காலை சுமார் 11.00 மணியளவில் காவல் ஆய்வாளரிடம் அறிக்கை செய்தேன். அப்போது அவர் என்னிடம், திருவண்ணாமலை மாவட்டம் செய்யார் திருவத்திபுரம் நகராட்சி அலுவலகத்தில் பொதுமக்களிடம் வருவாய் பிரிவு, பொறியியல் பிரிவு, சுகாதாரப்பிரிவு, நகர நிலஅளவைப்பிரிவு மற்றும் நகரமைப்பு பிரிவு போன்ற பிரிவுகளில் பொதுமக்கள் கொடுக்கும் மனுக்களின் பேரில் வேலைகளை செய்து முடிப்பதற்கும், ஒப்பந்த பணிகளை முடித்தவுடன் ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்படும் பணி முடிவு அறிக்கை (Work Completion Report) வழங்குவதற்காகவும், பொதுமக்களிடம் இருந்தும் ஒப்பந்தாரர்களிடமிருந்தும் கையூட்டு பெறுவதாக கிடைக்க பெற்ற நம்பகமான தகவலின் பேரில திடீர் சோதனை மேற்கொள்ள இருப்பதாகக் கூறி, என்னை அரசுத்தரப்பு சாட்சி/பொறுப்பு துணை ஆய்வுக்குழு அலுவலராக உடனிருக்குமாறு கேட்டுக்கொண்டார். அதன்பின்பு, பிற்பகல் சுமார் 15.00 மணிக்கு நானும், காவல் ஆய்வாளர் திரு.இரா.அருள்பிரசாத் மற்றும் காவல் குழுவினருடன் இணைந்து, செய்யார் - ஆற்காடு சாலையில் அமைந்துள்ள திருவத்திபுரம் நகராட்சி அலுவலகத்திற்கு வந்து திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேலும் திருவத்திபுரம் நகராட்சி அலுவலகமானது மேற்கு நோக்கிய நுழைவு வாயிலை கொண்டுள்ளது. கிழக்கு திசையில் உணவு பாதுகாப்பு அலுவலர் அலுவலகம் அமைந்துள்ளது. தெற்கு திசையில் நகர மன்ற கூடமும் அதன் கிழக்கே நகர நில அளவைப் பிரிவு இயங்கி வருகிறது. அந்த வளாகத்தின் வடக்கு திசையில் இருந்த நகராட்சி கட்டிடத்தில் நகராட்சியின் பிரிவு அலுவலகங்கள் இயங்கி வருகிறது. இக்கட்டிடம் தெற்கு பார்த்த நுழைவு வாயிலை கொண்டுள்ளது. இதன் முகப்பில் வாகன நிறுத்தம் உள்ளது மேற்கு திசையில் நகர மன்ற தலைவர் அலுவலகம் அமைந்துள்ளது கிழக்கு திசையில் கணினி வரி வசூல் மையம் அமைந்துள்ளது வடக்கே கண்ணாடி கதவு கொண்ட நுழைவு வாயில் அமைந்துள்ளது. அதனுள் மேற்கு திசையில் நகராட்சி ஆணையாளர் அலுவலகம் மற்றும் நகரமைப்பு பிரிவு உள்ளது வட மேற்கே நகராட்சி மேலாளர் மற்றும் B1 பிரிவு உள்ளது வடகிழக்கில் D பிரிவு, C1 பிரிவு, E1 பிரிவு ஆகியவை உள்ளது. கிழக்கே நகராட்சி பொறியாளர் அலுவலகம் அமைந்துள்ளது. நகராட்சி பொறியாளர் பிரிவில் நகராட்சி பொறியாளர் அலுவலகத்திற்கு கிழக்கே அதன் பிரிவு அலுவலகம் தனியாக இயங்கி வருகிறது. வடக்கு திசையில் பொதுப் பிரிவின் A1, A2,

H1 ஆகிய பிரிவுகளுக்கான கண்ணாடி கூடம் உள்ளது. அதன் பின்னால் வடக்கு திசையிலேயே கணினியறை, வருவாய் ஆய்வாளர் அறை, துப்புரவு ஆய்வாளர் அறை மற்றும் மகளிர் திட்டம் ஆகிய பிரிவுகளுக்கான அறைகள் அமைந்துள்ளது. இந்த திடீர் சோதனையை ஆரம்பிப்பதற்கு முன்பு வருவாய் பிரிவு, பொது சுகாதாரம், மக்கள் தொகை கணக்கெடுப்புப்பிரிவு, தகவல் தொழில்நுட்ப பிரிவு, நகர நில அளவைப்பிரிவு, நகரஊரமைப்பு பிரிவு, பொறியியல் பிரிவு என அனைத்து பிரிவுகளிலும் உள்ள அலுவலக ஊழியர்கள் மற்றும் தற்காலிக பணியாளர்கள் அனைவரையும் ஒரு சேர அலுவலகத்தின் மையப்பகுதியில் அழைத்து வரப்பட்டது. அப்போது திருவண்ணாமலை மாநகராட்சி ஆணையாளர் திரு.S.ஆண்ருஸ் அவர்கள் அவருடைய அலுவலகத்தில் இல்லை, விசாரித்த போது, மதிய உணவிற்காக சென்றிருப்பதாக கூறினார்கள். பின்பு ஆணையாளர் அவர்களிடம் தகவல் தெரிவித்து அலுவலகம் வருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. பின்பு மையப்பகுதிக்கு அழைத்துவந்த அலுவலர்கள் முன்பாக சோதனைக்கு வந்த அலுவலர்கள் அனைவரும் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டும், தங்களை தற்சோதனைக்கு உட்படுத்தி கொண்டும், தங்களிடம் எந்த பணமும் இருப்பில் இல்லை என்றும் அலுவலக ஊழியர்களுக்கு உறுதி செய்து காண்பிக்கப்பட்டது. அதன் பின்பு சுமார் 15.15 மணியளவில் திருவத்திபுரம் நகராட்சி ஆணையாளர் திரு.S.ஆண்ருஸ் அவர்கள் அலுவலகம் வந்து சேர்ந்தார். பின்னர் மேற்படி அலுவலர்கள் ஒவ்வொருவராக சோதனை செய்தும், பெண் அலுவலர்களை செய்யார் அனைத்து மகளிர் காவல் நிலைய காவலர் எண்.2553 திருமதி.பிரபாவதி என்பவர் மூலம் நகராட்சி பொறியாளர் தனி அறையில் தனித்தனியாக சோதனை செய்யப்பட்டது. சோதனையின் போது கண்டறியப்பட்ட தொகை மற்றும் தகுந்த முகாந்திரம் கூறியதால் எனது முன்னிலையில் திரும்ப அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு

வ. எண்.	அலுவலரின் பெயர் மற்றும் முகவரி	பதவி பெயர்	வைத்திருந்த தொகை (ரூ)	தகுந்த முகாந்திரம் கூறியதால் திருப்பி கொடுக்கப்பட்ட தொகை (ரூ)
1.	திரு.S.ஆண்ருஸ், த/பெ.சேசு பிரான்சிஸ், எண்.93, 3வது, குறுக்கு தெரு, எம்.ஜி–ஆர் நகர், புழல், சென்னை 66.கைபேசி எண்.8056050566.	நகராட்சி ஆணையாளர்	ரூ.40/–	ரூ.40/–

2.	திருமதி.மு.ஆனந்தி, த/பெ.முபாரக், வயது 29, எண்.51, பழைய மசூதி தெரு, செய்யார், திருவண்ணாமலை மாவட்டம். கைபேசி எண்.9500767570	பொது சுகாரதார பிரிவு, தற்காலிக தட்டச்சர்	இல்லை	இல்லை
3.	திருமதி.S.தேவிகா, த/பெ.திவாகர், வயது 27, எண்.450, பிள்ளையார் கோவில் தெரு, மாங்கரணிகிராமம், ஆலத்துர் போஸ்ட், செய்யார் தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம், கைபேசிஎண். 9360640305	தொழில்நுட்ப உதவியாளர், Census, Contract Basis. Temporary Post	ரூ.100/–	ரூ.100/–
4.	திருமதி.வெ.ஜீவா, க/பெ.வெங்கடேசன், வயது 23, எண்.41, காமராஜர் நகர், மார்க்கெட் செய்யார், திருவண்ணாமலை மாவட்டம். கைபேசி எண்.9042393879	உதவியாளர், Census, Contract Basis. Temporary Post	இல்லை	இல்லை
5.	திருமதி.மீனா க/பெ.இராஜேஷ், வயது30, எண்.08, சோழன் தெரு, செய்யார், திருவண்ணாமலை மாவட்டம். கைபேசி எண்.8870502467	மகளிர்குழு Community Organizers, Contract Basis. Temporary Post.	ரூ.500/–	ரூ.500/–
6.	திருமதி.சவீதா, க/பெ.புருஷோத்தமன், எண்.415/ஆ, அதியாமான் தெரு, செய்யார், திருவண்ணாமலை மாவட்டம். கைபேசி எண்.9003392616	நகர நிலஅளவர்	ரூ.250/–	ரூ.250/–

7.	திருமதி.கனிமொழி, க/பெ.பாலாஜி, வயது 36, எண்.568, பஜனைகோவில்தெரு, பையூர்ஆரணி, திருவண்ணாமலைமாவட்டம், கைபேசி எண்.8778800753	உதவியாளர், பொதுபிரிவு, I Establishment seat.	ரூ.1000/–	ரூ.1000/–
8.	திருமதி.மீனாட்சி, க/பெ.எழிலரசன், வயது 46, எண்.6,செங்கல்வராயன் தெரு, செய்யார், திருவண்ணாமலை மாவட்டம், கைபேசி எண்.9884870540	பொது பிரிவு, அலுவலக உதவியாளர்.	ரூ.160/–	ரூ.160/–
9.	திருமதி.பூங்கொடி, க/பெ.ஆனந்தன், வயது 38, எண்.10, கண்ணகி நகர், ஆரணி, திருவண்ணாமலைமாவட்டம், கைபேசி எண்.9566334659	ஆ2 பிரிவு, இளநிலை உதவியாளர்,	ரூ.60/–	ரூ.60/–
10.	திருமதி.துலக்கானம், க/பெ.சீனிவாசன், வயது 52, எண்.84, குள்ளஞ்சூர் கிராமம் மற்றும் அஞ்சல், காஞ்சிபுரம் தாலுக்கா மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம், கைபேசி எண்.9360609722.	வருவாய் உதவியாளர், வருவாய் பிரிவு,	ரூ.130/–	ரூ.130/–
11.	திரு.மணிகண்டன், த/பெ.கண்ணையன், வயது 42, எண்.870, ஸ்ரீரங்கநாதர் தெரு, கீழ்புதுப்பாக்கம் விரிவு, செய்யார் வட்டம், திருவண்ணாமலை மாவட்டம். கைபேசி எண்.9888339127	அலுவலக உதவியாளர், குழந்தை வளர்ச்சி திட்டம் அலுவலகம், செய்யார்.	ரூ.8,500/–	ரூ.8,500/–

12.	திரு.M.திருநாவுக்கரசு, த/பெ.மாசிலாமணி, வயது 36, எண்.82 பஜனை கோவில் தெரு, துரிஞ்சிக்குப்பம் கிராமம, ஆத்துவாம்பாடி அஞ்சல், போளூர் தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம். கைபேசி எண்.8122316770.	தற்காலிக ஊழியர், ஆதார்கார்டு இயக்குபவர்.	ரூ.330/-	ரூ.330/-
13.	திரு.T.கீர்த்திவாசன், த/பெ.துளசிராமன், வயது 34, எண்.19 LIC நகர், செய்யார் தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம். கைபேசி எண்.9789071328	நகரமைப்பு பிரிவு, பொறியியல் பிரிவு, இளநிலை உதவியாளர்.	ரூ.15/-	ரூ.15/-
14.	திரு.S.இரகுராமன், த/பெ.சேகர், வயது 29, எண்.451 கே.டி.எஸ் மெயின் தெரு, மாமல்லன் நகர், காஞ்சிபுரம் மாவட்டம். கைபேசி எண்.6374170550	இளநிலை உதவியாளர், வருவாய் பிரிவு.	ரூ.110/-	ரூ.110/-
15.	திரு.K.சீனுவாசன், த/பெ.கண்ணன், வயது 46, எண்.10, திண்டிவனம் மெயின்ரோடு, வந்தவாசி, திருவண்ணாமலை மாவட்டம், கைபேசி எண்.9360524716	இளநிலை உதவியாளர், பொது சுகாரதாரப்பிரிவு.	ரூ.689/-	ரூ.689/-
16.	திரு.K.ஜெகநாதன், த/பெ.கோதண்டன், வயது 40, எண்.1/50, பஜனை கோவில் தெரு, வெம்பாக்கம், திருவண்ணாமலை மாவட்டம், கைபேசி எண்.942855135	தற்காலிக ஊழியர், பொது சுகாதாரப்பிரிவு, Animator	ரூ.126/-	ரூ.126/-

17.	திரு.J.சுரேஷ்குமார், த/பெ.ஜெயராமன், வயது 46, எண்.356, அய்யாவு தெரு, செய்யார், திருவண்ணாமலை மாவட்டம். கைபேசி எண்.9952714209	பதிவறை எழுத்தர், பொதுபிரிவு.	ரூ.60/-	ரூ.60/-
18.	திரு.A.சுரேஷ்கிருஷ்ணன், த/பெ.ஆனந்தவயது 27, எண்.193, புதுதெரு, கொட்டை கிராமம், வந்தவாசி, திருவண்ணாமலை மாவட்டம், கைபேசி எண்.9566932236.	தொழில்நுட்ப உதவியாளர், தற்காலி பணியாளர், பொறியியல் பிரிவு.	ரூ.200/-	ரூ.200/-
19.	திரு.R.ஆனஸ்ட்இராஜ், த/பெ.இரவி, வயது 32, எண்.14, திருவள்ளுவர் நகர், செய்யார், திருவண்ணாமலை மாவட்டம், கைபேசி எண்.6382358619.	அலுவலக உதவியாளர், பொதுபிரிவு.	ரூ.235/-	ரூ.235/-
20.	திரு.சந்தானம், த/பெ.தேவராஜ், வயது 56, எண்.23, சக்திநகர், ஆரணி தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம். கைபேசி எண்.8072116762.	அலுவலக உதவியாளர், பொது பிரிவு.	ரூ.180/-	ரூ.180/-
21.	திருமதி.திவ்யா, க/பெ.கார்த்திக், வயது 31, எண்.18, திருவள்ளுவர் நகர், கொடநகர், செய்யார் திருவண்ணாமலை மாவட்டம், கைபேசி எண்.8438226335	பொது மக்கள் – ஒற்றுமை மகளிர்குழு	இல்லை	இல்லை
22.	திருமதி.லலிதா, க/பெ.நந்தகுமார், வயது 29, எண்.58, ஒத்தவாடைபிராமணர்தெரு, செய்யார்திருவண்ணாமலைமாவடடம், கைபேசி எண்.7397623817	பொதுமக்கள்மாரியம்மன்மகளிர்குழு	ரூ.520/-	ரூ.520/-

23.	திருமதி.வேண்டா, க/பெ.செல்வம், வயது 36, எண்.157, சமாதியான்குளத்தெரு, செய்யார்திருவண்ணாமலைமாவட்டம், கைபேசி எண்.9865799864	பொதுமக்கள், மகளிர்குழுவிளையாட்டுவிநாயகர்	ரூ.340/-	ரூ.340/-
24.	திருமதி.பரமேஸ்வரி, க/பெ.காத்திகேயன், வயது 33, எண்.52, பிராமணர்தெரு, கீழ்புதுப்பாக்கம் செய்யார் திருவண்ணாமலை மாவட்டம், கைபேசி எண்.8870332264	பொதுமக்கள் தள்ளு வண்டி லோன் பெற	ரூ.240/-	ரூ.240/-
25.	திருமதி.சாந்தி, க/பெ.இரவி, வயது 47, எண்.51, சமாதியான் குளத்தெரு, செய்யார் வட்டம், திருவண்ணாமலை மாவட்டம், கைபேசி எண்.9043697035	பொதுமக்கள், மளிகை கடை லோன் பெற	ரூ.80/-	ரூ.80/-

மேலும் திருவத்திபுரம் நகராட்சி அலுவலகத்தில் பணியில் இருந்த அலுவலர்களின் UPI Transaction பணப்பரிமாற்ற விவரங்களை ஆய்வு செய்ததில் நகராட்சி அலுவலக உதவியாளர் திரு.ஆர்.ஆனஸ்ட்ராஜ் என்பவரது செய்யார் கிளை கனரா வங்கி எண்.6810101001597 சேமிப்பு கணக்கிற்கு பணம் வரவு வைக்கப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு.

வ. எண்	பணம் அனுப்பியவர் விவரம்	தேதி	தொகை	Transaction ID
1.	செல்வராஜ் பழனிசாமி	14.03.2026	ரூ.90,000/-	643909024700
2.	சண்முகம் தீபா	29.04.2026	ரூ.50,000/-	611995284393
3.	சித்ரா	10.05.2026	ரூ.50,000/-	IDIBH13041538356
		மொத்தம்	ரூ.1,90,000/-	

மேற்படி தொகை சம்மந்தமாக எனது முன்னிலையில் திரு.ஆர்.ஆனஸ்ட்ராஜ் அவரிடம் விசாரிக்க முன்னுக்கு பின் முரணான வகையில், அவர்கள் விவரம் சரிவர கூற முடியாததாலும், மேற்படி தொகையானது அலுவலக பணிக்காக பெறப்பட்ட கையூட்டு தொகை என சந்தேகத்தின் பேரில் மேற்படி வங்கி எண்ணின் பரிவர்த்தனை

விவரங்களை அவரது கைப்பேசியில் இருந்து பதிவிறக்கம் செய்து பிரதி நகல் எடுக்கப்பட்டு அதில் நானும், அலுவலக உதவியாளர் திரு.ஆனஸ்ட்ராஜ் மற்றும் நகராட்சி ஆணையாளர் திரு.S.ஆண்ருஸ் ஆகியோர் கையொப்பம் செய்து வழக்கின் விசாரணைக்காக ஆவணம் கைப்பற்றப்பட்டது. மேலும், திருவத்திபுரம் நகராட்சி அலுவலகத்தின் அனைத்து பிரிவு அலுவலகங்களிலும் எனது முன்னிலையில் சம்மந்தப்பட்ட பணியாளர்கள் முன்பு சோதனை மேற்கொண்டதில் சந்தேகப்படும்படியான பணம் ஏதும் புலப்படவில்லை. மேலும் திருவத்திபுரம் அலுவலகத்தின் வாயிலிலோ, எந்த ஒரு அலுவலக பிரிவுகளிலும் ஊழல் தடுப்பு மற்றும் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு & ஊழல் தடுப்பு இயக்குநர் அலுவலக முகவரி குறித்த விழிப்புணர்வு பலகை வைக்கப்படவில்லை. மேலும் அலுவலக ஊழியர்கள் அரசு உத்தரவுப்படி அரசு அலுவலகங்களில் பணியில் இருக்கும் போது அலுவலக அடையாள அட்டை கண்டிப்பாக அணிந்திருக்க வேண்டும். ஆனால் நகராட்சி ஆணையாளர் திரு.S.ஆண்ருஸ், இளநிலை உதவியாளர் திரு.கீர்த்திவாசன், பதிவறை எழுத்தர் திரு.சுரேஷ்குமார், இளநிலை உதவியாளர் திருமதி.பூங்கொடி, பொதுப்பிரிவு அலுவலக உதவியாளர் திருமதி.மீனாட்சி, நகர நில அளவையர் திருமதி.சவிதா, பொதுப்பிரிவு (நிர்வாகம்) உதவியாளர் திருமதி.கனிமொழி, வருவாய்பிரிவு உதவியாளர் திருமதி.துலுக்கானம் ஆகியோர் திடீர் சோதனையின் போது தங்கடைய அடையாள அட்டையை அணியாமல் அலுவலக பணியில் இருந்தனர். பின்னர் திருவத்திபுரம் நகராட்சி அலுவலக பொது சுகாதாரப்பிரிவு, வருவாய் மற்றும் நகரமைப்பு பிரிவு, பொதுப்பிரிவு, பொறியியல் பிரிவு ஆகிய பிரிவு அலுவலர்களின் 2026-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திற்கான வருகைப்பதிவேடு பக்கத்தின் நகல்கள், திருவத்திபுரம் நகராட்சி பணியாளர்கள் கையிருப்பு தொகை விவரப்பதிவேடு, திருவத்திபுரம் நகராட்சியின் வங்கி கொடுப்பு தொகுப்பு பட்டியல் 1 முதல் 2 பக்கங்கள் மற்றும் திருவத்திபுரம் நகராட்சி Service Request Status wise Summary ஆகியவற்றின் நகல்கள் எடுத்து அதில் திருவத்திபுரம் நகராட்சி ஆணையாளர் திரு.S.ஆண்ருஸ், பொறுப்பு துணை ஆய்வுக்குழு அலுவலர் திருமதி.ஆ.தேன்மொழி மற்றும் காவல் ஆய்வாளர் ஆகியோர் கையொப்பம் செய்து வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையின் போது யாருக்கும் மனதளவிலோ, உடலளவிலோ எந்த துன்புறுத்தலும் ஏற்படுத்தவில்லை. மேலும், அலுவலகத்தில் உள்ள ஆவணங்களுக்கோ, பொருட்களுக்கோ எந்தவித சேதமும் ஏற்படுத்தவில்லை. பின்பு மீண்டும் குழுவினர்களை தற்சோதனைக்கு உட்படுத்தி கொண்டும், தங்களிடம் எந்த பணமும் இருப்பில் என அலுவலக ஊழியர்கள் முன்பு

காண்பிக்கப்பட்டது. இந்த திடீர் சோதனையின் செயல்முறை 22.09.2026 பிற்பகல் 13.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு இரவு 22.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மேலும் வழக்கு நிமித்தமாக கைப்பற்றப்பட்ட ஆவணங்களை இணைத்து இந்தப் புகார் மனுவைக் கொடுக்கிறேன். இந்தப்புகார் மனுவின் பேரில் தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (Sd/-xxxxx) ஆ.தேன்மொழி, 23/09/2026, ST.(SSS), கலசபாக்கம்.

Sir/Madam,

Received the complaint on 23.09.2026 at 17.00 hrs and a case was registered in Tiruvannamalai V&AC Cr.No.09/2026 u/s 7(a) of PC Act 1988 as amended by the PC (Amendment) Act 2018, on 02.10.2026 at 17.00 hrs.

(Sd/-XXXXX) இரா.அருள்பிரசாத், கா.ஆ 02.10.2026 காவல் ஆய்வாளர், ஊ.தக பிரிவு, திருவண்ணாமலை

The FIR in original along with the complaint is being sent to the Hon'ble Principal District and Sessions Judge, Tiruvannamalai and the other copies to the officers concerned.

02/10/2026
காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு & கண்காணிப்பு பிரிவு,
திருவண்ணாமலை மாவட்டம்.